Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 39/2017 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW9 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | மணிமாறன் (உதவி ஆய்வாளர்) |
| Father's Name | – | ராஜு |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 07th February 2025.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

A1, A2, A3 present. A4 absent. 317 petition filed and allowed. A1 to A4 counsel present.

**முதல் விசாரணை :**

நான் தற்போது அவினாசி அருகே சேயூர் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றிவருகிறேன். கடந்த 04.11.2016 ம் தேதி மகாலிங்கபுரம் காவல்நிலைய த.கா1672 திரு ஞானசுந்தரம் அவர்கள் நிலைய அலுவலில் இருந்த போது கோட்டாம்பட்டி அண்ணாநகரைச் சேர்ந்த முருகன் மனைவி சாந்தி என்பவர் நிலையம் ஆஜராகிக் கொடுத்த எழுத்துப்பூர்வமான புகாரினைப் பெற்று நிலைய கு.எண்.201/2016 சட்டபிரிவுகள் 294(பி),323,324,,506(ii) இதச & Sec 4 of TNPHW Act ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். பின்பு புலன் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் திரு பரமேஸ்வரனிடம் ஒப்படைத்தார். அவர் தனது புலன் விசாரணையை முடித்துவிட்டு மேற்கட்ட புலன்விசாரணைக்காக என்னிடம் ஒப்படைத்தார். பின்னர் சாட்சிகள் 1 முதல் 10 வரை விசாரித்ததில் உதவி ஆய்வாளரிடம் கூறியதையே என்னிடமும் கூறியதால் நான் தனியாக வாக்குமூலம் பதிவுசெய்யவில்லை. முதல் தகவலறிக்கை பதிவு செய்த தகா 1672 திரு ஞானசுந்தரத்தையும் , உதவி ஆய்வாளர் திரு பரமேஸ்வரனையும் விசாரித்தேன். எதிரிகள் அனைவரும் மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் பிணை பெற்றுவிட்டதால் அவர்களை கைது செய்ய இயலவில்லை.

பின்னர் எனது புலன் விசாரணையை முடித்து விட்டு எதிரிகள் மீது 22.11.2016 ம் தேதியன்று மேற்கண்ட சட்ட பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

அசா.1 கொடுத்த புகாரினை தொடர்ந்து இந்த வழக்கு சம்பந்தமாக 1ம் எதிரி புகார் கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தற்சமயம் ஞாபகம் இல்லை. கு.எண்.200/2016 ல் எங்கள் காவல்நிலையத்தில் எதிர் வழக்காக 1ம் எதிரி அசா.1 ன் மீது புகார் கொடுக்கப்பட்டு அந்த புகார் பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மழை தண்ணீர் 1ம் எதிரியின் வீட்டிற்குள் செல்வதால் அது தொடர்பாக பிரச்சனை ஏற்பட்டு எழுந்த வழக்குதான் இந்த வழக்கு என்றால் சரிதான். வழக்கு சம்பவம் நடைபெற்று 3 நாட்கள் காலதாமதமாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

காலதாமதம் குறித்து முதல் தகவலறிக்கையின் 8 ம் காலத்தில் விளக்கிக் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 1ம் எதிரி புகார் கொடுத்ததால்தான் அதில் இருந்து தப்புவதற்காக அசா.1 இந்த புகாரினை கொடுத்தார் என்றால் சரியல்ல. பிடிபொருட்கள், இரத்தக் கறை படிந்த துணிகளைக் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். அசா.1 க்கு காயம் எதுவும் இல்லை என விசாரணையில் தெரியவந்தது என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்ற தேதியில் காலையும் மாலையும் கைகளப்பு ஏற்பட்டது என்றால் சரியல்ல.

அசா.2 சந்தோஷ்தான் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார் என்றால் சரிதான். 01.11.2016 அன்று அசா.2 மருத்துவமனையில் சிகிச்சை பெறும்போது காவல்நிலையத்தில் வாக்குமூலம்

எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். 4 ம் எதிரி தீபிகா என்பவர் சம்பவ சமயத்தில் கல்லூரியில் பயின்று வந்த மாணவி என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இவ்வழக்கில் எதிரிகளை விசாரணை செய்யவில்லை. நான் சாட்சிகளை விசாரணை செய்தேன், வாக்குமூலங்களை பதிவு செய்யவில்லை. வழக்கின் அசா.1 மற்றும் 2 தான் வலுக்கட்டாயமாக சென்று எதிரிகள் மீது அடித்து காயம் ஏற்படுத்தினார்கள் என்றும் அந்த வழக்கில் இருந்து தற்காத்துக்கொள்வதற்காக பொய்யாக இந்த வழக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஒரே சமயத்தில் நடைபெற்ற சம்பவத்தின் அடிப்படையில் எதிரியின் வழக்கு பொருண்மைகளின் அடிப்படையில் தள்ளுபடி செய்யவேண்டியது என்றால் சரியல்ல. அசா.1 தன் மீது கொடுக்கப்பட்ட குற்றத்தினை ஒப்புக்கொண்டு கனம் நீதிமன்றத்தில் அபராதம் செலுத்தியுள்ளனர்.

நான் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது தவறுதலாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சொன்ன சமயத்தில் சொன்ன நேரத்தில் முதல்தகவலறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றாலும் காவல்நிலையத்தில் வைத்து மகஜர்கள் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. 4 ம் எதிரி கல்லூரி மாணவி என்பதால் அவரை பழிவாங்கவேண்டி முன்விரோதத்தின் காரணமாக 4 ம் எதிரி இவ்வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(S/d.Tr.E.Pragasam, B.A.B.L.,)

Judicial Magistrate No. II,
Pollachi.